## திருபெரும்புதூர் குடிநீர் வழங்கல் திட்டம்

- திருபெரும்புதூர் பேரூராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.42.20 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- குடிநீர் அபிவிருத்தித் திட்டம் கீழ்கண்ட முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது.
  - 39477 மீ. நீளத்திற்கு 100 மி.மீ முதல் 500 மி.மீ. வரை விட்டமுள்ள நெகிழ்வு இரும்பு பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள்.
  - 22355 மீ. நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்படும் பணிகள்.
  - 3361 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள்.
  - 4 இடங்களில் மேல்நிலை தொட்டிகள் கட்டும் பணிகள்:
    1. டி.கே.நாயுடு நகர் - 5.0 இலட்சம் லிட்டர்
    2. பிருந்தாவன் நகர் - 5.0 இலட்சம் லிட்டர்
    3. ஏ.எல்.எஸ் நகர் - 3.0 இலட்சம் லிட்டர்
    4. ராஜிவ் காந்தி நகர் - 10.0 இலட்சம் லிட்டர்
  - 3 இடங்களில் கீழ்நிலை தொட்டிகள் கட்டும் பணிகள்.
    1. செம்பரம்பாக்கம் - 5.0 இலட்சம் லிட்டர்
    2. ஏ.எல்.எஸ் நகர் - 10.0 இலட்சம் லிட்டர்
    3. ராஜிவ் காந்தி நகர் - 4.0 இலட்சம் லிட்டர்
- ஒப்பந்தத்தின் விவரங்கள்:
  - ஒப்பந்த பணிகள் ரூ.2736 இலட்சத்திற்கு 16 மாதத்தில் பணி முடிக்க M/s. Siva Swathi Singan Consortium 08.03.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 01.04.2013 அன்று தொடங்கப்பட்டு, 31.07.2014 அன்று முடிக்க உத்தேசப்பட்டது, ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- பணிகளின் தற்போதைய நிலை

  1) தற்போது 89.70 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.

  2) இது வரை இத்திட்டத்திற்கு ரூ.3784.54 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

  3) இத்திட்டப் பணிகள் அனைத்தும் செப்டம்பர் 2022 ல் முடிக்கப்படும்.

4) இது நாள் வரை 15.66 மீ நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்பட்டது. மீதமுள்ள 6.7 கீ.மீ நீளத்திற்கு NH4 ஓரமாக இருக்கும் ஆக்கரமிப்புகள் அகற்றப்படாததால், இந்த பணி தனியாக பிரிக்கப்பட்டு புதிய ஒப்பந்ததாரர் மூலம் முடிக்க ஒப்புதல் பெறப்பட்டது. இதன் அடிப்படையில், இப்பணி இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு , புதிய ஒப்பந்ததாரர்களுக்கு (M/s BFS Technologies Pvt Ltd, and M/s.Sri Ambal Enterprises)பணி ஆணைகள் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

5) இத்திட்டம் நிறைவேறியவுடன் திருபெரும்புதூர் பேரூராட்சி பகுதிக்கான தேவையான 17.71 மில்லியன் லிட்டர் குடிநீர் செம்பரம்பாக்கத்தில் அமைந்துள்ள 530 மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப்படும். இதன்மூலம் சுமார் 1,14,197 மக்கள் பயன் பெறுவார்கள்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in